**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

அவர்கள் முதிர் வயதிலும் கனிதருவர்.

(திருப்பாடல்: 92:14)

நற்செய்தியில் சீடர்கள் இயேசுவை அணுகி இறைவேண்டல் செய்யக் கற்றுத்தருமாறு கேட்கிறார்கள். இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டல் குறுகியது தான்; ஆனால் ஆழமானது. இயேசுவின் வாழ்க்கையில் அவருடைய தந்தையாகிய கடவுள் தான் அவருக்கு முதன்மைக் கவனமாக இருந்தது. அதனால் தான் கடவுளின் பெயருக்கு மாட்சி செலுத்துவதும், கடவுளின் அரசின் வருகையும் அனைத்து விண்ணப்பங்களின் தொடக்கமும் விண்ணகத் தந்தையை நோக்கியதாக இருந்தது. நம் உலகத்திற்கும், நம் வாழ்விற்கும் உள்ள கடவுளின் நோக்கத்தைக் கண்டுகொள்ள நம்மையும் தாண்டி அப்பால் பார்க்குமாறு இயேசு நமக்குக் கற்பிக்கிறார்.

நம்முடைய பயணத்திற்காக உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும், நம் தேவைகளில் கவனம் செலுத்த இயேசு நமக்குக் கற்பிக்கிறார்.. மேலும், நம்மைக் காயப்படுத்தியவர்களை முழு சுதந்திரத்தோடு மன்னித்து அரவணைக்கவும், இதனால் கடவுளின் அருளைப் பெற்றுக்கொள்ளவும் எப்போதும் கடவுளின் மன்னிப்பை வேண்டி அவர்முன் நிற்கிறோம். தீமைக்கு அடிபணியாமல், தீமையை நன்மையால் வெல்லவும் நமக்கு ஏற்படும் சோதனைகளின்போது நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்திருக்கவும் கடவுளை வேண்டுகிறோம். மேலும் நம்முடைய கவனத்தை, தனிமனிதராக நம்மீது மட்டுமல்ல; சமூகத்தின் உறுப்பினர்களின் மீதும் செலுத்த வேண்டும். நமக்காகவும் பிறருக்காகவும் நாம் இறைவேண்டல் செய்கிறோம்.

இயேசு தம்முடைய போதனையை இரண்டு உருவகங்களுடன் தொடர்புபடுத்துகிறார். ஒன்று சமூகத்துடனும் மற்றவை குடும்ப வாழ்வோடும் தொடர்புபடுத்துகிறார். அவசர நேரத்தில் உதவி செய்ய, ஒரு நல்ல நண்பரை நம்பலாம் என்றும், ஒரு மகன் தனக்கு உணவளிக்கும் தந்தையின் மீது நம்பிக்கைக் கொண்டிருப்பதைப் போல, நமது தேவையின்போதும் நாம் எவ்வளவு அதிகமாக கடவுளை நம்பியிருக்கவேண்டும் என்பதையும் காட்டுகின்றார்.

நற்செய்தியின் இறுதியில் இயேசு தூய ஆவியாரின் உதவியை அதிகமாக கேட்கவேண்டுமென்று நமக்கு ஆலோசனை கூறுகிறார். நம்முடைய இறைவேண்டல் நாம் விரும்பும்வகையில் அமையாவிட்டாலும், நம்முடைய இறைவேண்டல் கடவுளின் தூய ஆவியானவரின் கொடையைப் பெற்றுக்கொள்ள வழிபிறக்கும்.

2 ஆம் ஆண்டு, உலக தாத்தா பாட்டிகளின் நாளைச் சிறப்பிக்கும் இந்நாளில், திருப்பாடல் 92:14 கூறுவதுபோல, “அவர்கள் முதிர் வயதிலும் கனிதருவர்” என்ற வார்த்தைக்கேற்ப திருத்தந்தை பிரான்சிஸ் முதியோர்களை இறைவேண்டல் செய்யும் ஆலய முற்றமாகவும், புகழ்ப்பாடல் பாடுவோராகவும், போராட்டங்கள் நிறைந்த சமூக வாழ்க்கையில் ஆதரிக்கும் சமூகமாகவும் இருந்திட “அனைத்தையும் தாங்கக்கூடியவர்களாக இருங்கள்” என்று அழைப்பு விடுக்கின்றார். ✣

**இன்றைய வாசகங்கள்:**

தொடக்கநூல்: 18: 20-32;

திபா: 138: 1-3, 6-8;

கொலோசையர்: 2: 12-14;

லூக்கா: 11: 1-13.

INTERNAL CIRCULATION ONLY
BUL 30/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

24 ஜூலை 2022

# Newtec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 17 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினம் (ஜூலை 24)**

# கடவுளின் நோக்கத்திற்காக, உங்களுக்கு அப்பாலும் பாருங்கள்

வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் கடவுளை நோக்கிய இறைவேண்டலில் ஈடுபடவேண்டும் என்று திருஅவை நம் கவனத்தை ஈர்க்கின்றது. எவ்வாறு இறைவேண்டல் செய்யவேண்டுமென்றும் அதே வேளையில் இடைவிடாமல் இறைவேண்டலில் ஈடுபடவேண்டுமென்றும் கிறிஸ்துவே இன்று நம்மை ஊக்குவிக்கிறார்.



Image: ©freepik.com